# 300 வீதத்தால் அதிகரித்த மின்சாரக் கட்டணம் 20 வீதத்தால் மாத்திரமே குறைக்கப்பட்டுள்ளது!

## நாடு மாட்டு வண்டி யுகத்திற்கு செல்கின்றது என்கிறார் ஹர்ஷண ராஜகருணா எம்.பி.




நவீன உலகத்தை நோக்கி நகர்வதற்குப் பதிலாக மீண்டும் மாட்டு வண்டி யுகத்திற்கு நாடு சென்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் "மின்சாரக் கட்டணத்தை 300 வீதத்தால் அதிகரித்த அரசாங்கம் தற்போது மின்சாரக் கட்டணத்தை 20 வீதத்தால் மிகக் குறைந்த வீதத்தினால் குறைத்துள்ளது. ஒரு காலத்தில் 70 – 80 ஆம் ஆண்டுகளில் வீடுகளுக்கு மின்சாரம் கிடைத்த போது மகிழ்ச்சியில் இருந்த நாட்டு மக்கள், தற்போது மின்கட்டணத்தை செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த நாடானது நவீன உலகத்தை நோக்கி நகர்வதற்குப் பதிலாக, மீண்டும் மாட்டு வண்டி யுகத்திற்கு போய்விட்டது.

2➤


மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 24 வியாழக்கிழமை 07.03.2024 கதிர் 197


## மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதால் உணவு வகைகளின் விலையையும் குறையுங்கள்!

### நுகர்வோர் உரிமைப் பாதுகாப்பு தேசிய இயக்கம் கோரிக்கை



மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதால் அதற்கமைய உணவு வகைகளின் விலையை குறைக்குமாறு அனைத்து உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் விற் பனை யாளர்கள் ஆகியோரை கேட்டுக்கொள்ளவதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள், எரிவாயு, நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களில் அதிகரிப்பு ஏற்படும்போது அதனை காரணம் காட்டி, உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகள் என அனைத்தும் ஒரே நேரத்தில் விலையை உயர்த்துவது போலவே, கட்ட ணங்கள் குறையும் போதும் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கவே ண்டியது கடமை யாகும் என நுகர்வோர் உரி மைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது 2➤

## தேர்தல் கூட்டணி குறித்து மைத்ரிபாலவுடன் ஐந்து கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன

### சுதந்திரக் கட்சியின் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

எதிர்வரும் தேர்தல்களில் கூட்டிணைந்து போட்டியிடுவது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் அனுர பிரயதரிசன ஆகியோர் கடந்த செவ்வாயன்று முக்கிய கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் துஷ்மந்த மித்ரபால மற்றும் லசந்த அலகியவன்ன ஆகிய எம்பிக்களும் கலந்து கொண்டதாக சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் விவசாயத்துறை அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



சுதந்திர கட்சியின் தலைமையில் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணி குறித்து நீண்ட நேரமாக இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், புதிய கூட்டணிக்கான நிரந்தர சின்னம் குறித்தும் புதிய கூட்டணியில் 2➤

## கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் நன்றாக செயற்பட்ட சீடீ ஸ்கேன் இயந்திரமே அகற்றப்பட்டது

### பாதிப்பில்லை என்கிறார் வைத்தியசாலையின் பணிப்பாளர்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவில் காணப்பட்ட சீடீ ஸ்கேன் இயந்திரம் அகற்றப்பட்டமையால் நோயாளர்களுக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை எனவும் அதற்கு பதிலாக வேறு சீடீ ஸ்கேன் இயந்திரங்கள் இருப்பதாகவும் வைத்திய சாலை தரப்பில் பரிசோதனைகள் குறைவாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் குமார விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், அவசர விபத்து சிகிச்சை பிரிவி லிருந்த பழைய சீடீ ஸ்கேன் அகற்றப்பட்டு அதற்கு பதிலாக புதிய சீடீ ஸ்கேன் பொருத்தப்படுவதாகவும் இப்பணிகள் பூர்த்தியடைய எவ்வளவு காலம் செல்லும் என்பதை தன்னால் உறுதியாக கூறமுடியாது எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் இது தொடர்பாக வைத்தியசாலை வட்டாரங்கள் வேறு விதமான கருத்தை தெரிவித்துள்ளனர், அதாவது முன்னர் இருந்த சீடீ ஸ்கேன் 2➤

## யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பதில் அரசாங்க அதிபராக பொறுப்பேற்பு

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் மாவட்டப் பதில் அரசாங்க அதிபராக கடமைகளை பொறுப்பேற்றார்.

குறித்த நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த அ.சிவபாலசுந்தரன் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையிலேயே 2➤

## சாணக்கியன் எம்.பி. மீது தக்குதல் முயற்சி?

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தன்னைத் தாக்க முற்பட்டதாக தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப் பிட்டுள்ளார்.

தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் அவர் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார்.

2➤

## புதிய மின் இணைப்புக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்!

*புதிய மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ளும் போது தவணை முறையில் பணம் செலுத்தும் வாய்ப்பு எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.*

*வாய்மூல பதில்களை எதிர்பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.தர்மசேன கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அங்கு மேலும் உரையாற்றிய அமைச்சர், "சமீபத்தில், நாங்கள் 2 கொள்கை முடிவுகளை எடுத்துள்ளோம். மிகக் குறைந்த மின்கட்டணமுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பைத் துண்டிக்காமல் சிறிது கால அவகாசம் வழங்குவது முதல் விடயம். அதைத் தீர்ப்பதற்காக. மேலும் சுமார் 3000 ரூபாயாக இருந்த மீள் இணைப்புக் கட்டணம் 1300 ரூபாயாக குறைக்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு அதை 800 ரூபாயாக குறைக்க முயற்சிகள் எடுத்துள்ளோம்.*

*புதிய இணைப்பு பெறும்போது கட்டணம் 51,000 ரூபாவாக இருந்தது, தற்போது அந்த தொகை 35,000 ரூபாய் முதல் 40,000 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த தொகையில் 25 வீதத்தை மாத்திரம் செலுத்தி எஞ்சிய தொகையை 10 அல்லது 12 தவணையில் செலுத்துவதற்கான வாய்ப்பை அறிமுகப்படுத்த மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்றார்.*

## கொழும்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இயந்திரம் எவ்வித கோளாறுமின்றி இயங்கியதாகவும், அத்தகைய நிலையிலேயே அந்த இயந்திரம் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி அங்கிருந்து அகற்றப்பட்டதாகவும், அதற்கு பதிலாக சிங்கப்பூரிலிருந்து புதிய இயந்திரமொன்று தருவிக்கப்படுவதாக கூறப்பட்ட போதிலும், அவ்வாறான ஒரு புதிய சீடீ ஸ்கேன் இயந்திரம் இதுவரை கொண்டு வரப்படவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசிய வைத்தியசாலையில் தற்போது காணப்படும் இரண்டு சீடீ ஸ்கேன் இயந்திரங்களில் ஒன்று அவசர விபத்து சிகிச்சைப் பிரிவிலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ளதாகவும், மற்றைய ஸ்கேன் இயந்திரம் பாதையின் மறுபுறத்தில் வெளிநோயாளர் பிரிவில் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்தகைய நிலையில் அவசர விபத்து பிரிவில் இயந்திரங்களின் ஆதாரத்துடன் உள்ள நோயாளிகளை சீடீ ஸ்கேன் இயந்திரங்கள் உள்ள இடங்களுக்கு கொண்டு செல்வது எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமாகும் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-21)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணையவுள்ள கட்சிகளின் உறுப்பினர்களை கொண்ட குழுவொன்றை அமைப்பது குறித்தும் இங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இப்போதைக்கு ஐந்து காட்சிகள் இந்த கூட்டணியில் இணைந்து கொள்ள கலந்துரையாடியுள்ளதாகவும், அந்த கட்சிகளின் தலைவர்களுடன் இன்று அல்லது நாளை இன்னுமொரு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகவும் மஹிந்த அமவீர மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-19)

## 300 வீதத்தால் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறைக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத்திற்கு ஏற்ப உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-18)

## மின்சாரக் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மின் கட்டணம் பாரிய அளவில் குறைய வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர், அரசாங்கம் மின்கட்டணத்தை உயர்த்தும் போது, அதிக சதவீதத்தில் அதிகரிக்கிறது ஆனால் அதை குறைக்கும் போது மிகக் குறைந்த சதவீதத்திலேயே குறைத்துள்ளது. தற்போது 6 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மின் கட்டணம் செலுத்த முடியாமல் துண்டிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணத்தை செலுத்த முடியாத நிலையில் இன்று பல கிராமங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

நாட்டில் இயல்பு வாழ்க்கை வாழ மின்சாரம் அவசியம். அரசாங்கம் மக்களை 70 மற்றும் 80 ஆண்டுகளுக்கு பின்னோக்கி கொண்டு செல்கின்றது. மக்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டியது இலங்கை மின்சார சபை மற்றும் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இலங்கை மின்சார சபை நட்டத்தை சந்திக்கும் போது, அந்த நஷ்டத்தை மறைமுகமாக மக்கள் மூலம் ஈடுகட்ட முயலக் கூடாது" என்றார். (ரெம-

## சாணக்கியன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை தன்னை அவர் அச்சுறுத்தியதோடு நாடாளுமன்றத்தில் பிரதமரின் அலுவலகம் செல்லும் வழியில் நீர் எவ்வாறு நாட்டின் பிரதமரை சந்திக்கலாம்? என்று கூறி தன்னைத் தாக்க முற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இனவாதிகள் நாட்டில் இருக்கும் வரை எவ்வாறு எமது மக்களுக்கான நீதி கிடைக்கும்? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு உத்தரவாதம் இந்த நாட்டில் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ்.மாவட்ட........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதீபன் பதில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்படும் வரை பதில் அரசாங்க அதிபராக இவர் கடமை ஆற்றுவார்.

# யாழ் நல்லூரில் பாரவூர்தி விபத்து

பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறி இன்று காலை நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வளைவில் திரும்பும் போது அங்கிருந்த கடைக் கட்டத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் லொறியின் முன்பக்கம் கடுமையாக சேதமடைந்ததுடன் கட்டடத்திலிருந்த தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றின் அலுவலகமும் சேதமடைந்துள்ளது.

லொறியின் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அருகில் இருந்த முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இருந்த முச்சக்கரவண்டியொன்றும் சேதத்திற்குள்ளானது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கின் பெரும் சமரில் மத்திய கல்லூரி 157 ஓட்டங்கள்



வடக்கின் பெரும் சமர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி இன்று காலை ஆரம்பமானது.

117 வது முறையாக இடம்பெறும் இப்போட்டி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று, நாளை, நாளை மறுதினம் என மூன்று தினங்கள் நடைபெறுகின்றது.

இன்று காலை 9.30 மணியளவில் இரண்டு கல்லூரிகளினதும் கீதங்களுடன் போட்டி ஆரம்பமானது.

இன்றைய போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ் மத்திய கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்து 157 ஓட்டங்களை மட்டுமே எடுத்தனர்.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிவரும் பரியோவான் கல்லூரி அணி 1 விக்கெட்டை மட்டும் இழந்து 102 ஓட்டங்களை எடுத்திருந்தது.




# முட்டைகளுக்கான அதிகூடிய சில்லறை விலை அறிவித்தல்

முட்டைகளுக்கான அதிகூடிய சில்லறை விலையை அறிவிக்கும் வரத்தமானியை வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட விலை உள்ளடக்கிய யோசனை இந்த வாரத்தினுள் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சமர்ப்பிப்பதற்கு விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது சந்தையில் முட்டைகளின் விலை அதிகரிப்புத் தொடர்பாக மீளாய்வுக் கலந்துரையாடல் விவசாய அமைச்சில் இடம்பெற்ற போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

முட்டையொன்றை உற்பத்திசெய்வதற்காக 30 ரூபா மாத்திரமே செலவு ஏற்படுவதாகவும், தற்போது நாட்டில் முட்டை உற்பத்தி 5.8 மில்லியன் என்றும், 7.5 மில்லியன் முட்டைக்கான நுகர்வுத் தேவை காணப்படுவதாகவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

# கொழும்பில் கிழக்கு மாகாண ஆளுனருக்கும் கடற்றொழில் அமைச்சருக்குமிடையில் சந்திப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும்கடற்றொழில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

திருகோணமலைப் பொது மீன் சந்தை, கிண்ணியா மீன் சந்தை ஆகியவை தொடர்பாக இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், மட்டக்களப்பு வட்டவான், கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் இறால் பண்ணை தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின்போது திருகோணமலை நகரசபை செயலாளர், கிண்ணியா நகரசபை செயலாளர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர், இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபன அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மன்னார் சமுர்த்தி காரியாலய உத்தியோகத்தர்கள் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிக்குக் கள விஜயம்!



(எம்.எம்.றம்ஸீன்)

மன்னார் மாவட்ட சமுர்த்தி காரியாலய உத்தியோகத்தர்கள் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கத்திற்கான கள விஜயத்தினை ஓய்வுபெற்ற மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் தலைமையில் மேற்கொண்டனர்.

இதில் கல்முனை பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சம்மாந்துறை பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் யூ.எல்.எம்.சலீம், சமுர்த்தி முகாமையாளர் புவிராஜ் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் குறித்து மன்னார் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சாய்ந்தமருதில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிக் கட்டிடம் எங்கும் இல்லாதவாறு ஓய்வுபெற்ற மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார், சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப்பீட முகாமையாளராக இருந்தபோது அவரின் பாரிய பங்களிப்பு நிர்மாணிக்கப்பட்டது தொடர்பில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், வங்கி

முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா ஆகியோரினால் எடுத்துரைக்கப்பட்டது.






# வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா நிதி உதவி

(சர்ஜ/ன் லாபீர்)

இஸ்லாமிக் ரிலீப் -ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 57 குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் ஐ லைவ் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சுமார் 30 மில்லியன் ரூபா நிதி, வாழ்வாதார உதவியாக வழங்கும் நிகழ்வு அண்மையில் (05) அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எம்.ஏ.அஸ்ரப் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார்.

நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், இஸ்லாமிக் றிலீப் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் எம்.சிராஜ், திட்ட உதவியாளர் எம்.ஆஸாத் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இவ் வாழ்வாதாரக் கொடுப்பனவு இரண்டாம் கட்டம் என்பதோடு ஏற்கனவே முதலாம் கட்டத்தில் 124 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்கு உதவி பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில், கிராமிய மட்டத்தில் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்தி, வறுமையை இல்லாதொழிப்பதற்கு நாம் அனைவரும் ஒருமித்து செயற்படுவதோடு எதிர்காலத்தில் வறுமையற்ற இலங்கையை கட்டியெழுப்ப எமது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும், செயற்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், என்றும் குறிப்பிட்டார்.

# மரக்கன்றுகள் வைப்பு



கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் வருகை தந்து கல்லுண்டாய் வைரவர் கோவில் பகுதியில் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

# கற்பிட்டி எச்.பி.எப் இன் மகளிர் தின நிகழ்வு

(கற்பிட்டி - சியாஜ்)

கற்பிட்டி மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் (எச்.பி.எப்) மகளிர் தின நிகழ்வு

நாளை மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தன்று, நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம்.ம/ர் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வருடத்தின் கருப்பொருளுக்கு அமைய நிறுவனத்தின் வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கற்பிட்டி பிரதேசத்தில் மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் செயற்திட்டம் ஊடாக செயற்படும் மகளிர் அமைப்புக்களின் நிர்வாக உறுப்பினர்கள், கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கற்பிட்டி பிரதேச செயலக செயலாளர், கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர், பெண்கள் சுய முயற்சியான்மை அபிருத்திக் குழுக்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் பெரும் சமர்! இன்று ஆரம்பமாகியது






யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளிற்கிடையில் இடம்பெறும் “வடக்கின் பெரும் சமர்” என வர்ணிக்கப்படும் மூன்று நாட்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியானது இன்று ஆரம்பமாகியுள்ளது. இப்போட்டி, நாளை மற்றும் நாளை மறு தினமுமாக 3 தினங்கள் இடம்பெறுகிறது.

கடந்த காலங்களில் பிரிவு மூன்றில் ஆடிக் கொண்டிருந்த மத்திய கல்லூரி அணியினர் இம்முறை, முதல் முறையாக பிரிவு இரண்டிற்கு தரமுயர்த்தப்பட்டு ஆடிக் கொண்டிருக்கின்றனர். இது அவர்களிற்கு ஒரு புறம் சாதகமாகவிருக்க, கடந்த வருடம் பெரும் சமரில் சென். ஜோன்ஸிடமிருந்து கிண்ணத்தினை மீட்டது முதலாக தேசிய ரீதியில் அடுத்தடுத்து இரு தொடர்களில் சம்பியனாகியிருக்கின்றனர் என்பது அவர்களது வளர்ச்சியினை எடுத்துக்காட்டுவதுடன், அணியின் தொடர்ச்சியான சிறப்பு பெறுதிகளிற்கு சான்றாகவும் அமைகின்றது.

மத்திய கல்லூரி அணியின் பயிற்றுவிப்பாளராக கடந்த வருடம் பெரும் சமரில் இலகு வெற்றியினை நெறிப்படுத்தியவரும், அதே வருடத்தில் பிரிவு மூன்றின் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று அணியினை பிரிவு இரண்டிற்கு தரமுயர்த்துவதற்கு வழிநடத்தியவரும், அதன் தொடர்ச்சியாக இந்த பருவகாலத்தில் பிரிவு இரண்டின் டியர் பி போட்டித்தொடரில் சம்பியனாவதற்கு அணியினை வழிநடத்தியவருமான குலேந்திரன் செல்டன் செயற்படுகின்றார்.

**யாழ். மத்திய கல்லூரி அணி –**

நிசாந்தன் அஜய், சகாதேவன் சயந்தன், ரஞ்சித்குமார் நியூட்டன், சதாகரன் சிமில்ட்டன், சுதர்சன் அனுசாந்த், தகுதாஸ் அபிலாஷ், சகாயஜெகன் கெவின் டெறிக்சன், விக்னேஸ்வரன் பருதி, அருமைத்துரை சிந்துஜன், அன்ரனேசன் அபிஷேக், முரளி திசோன், ஜெகதீஸ்வரன் அஷ்விதன், கணேசலிங்கம் மதுசுதன், சுந்தரலிங்கம் றிலக்சன், பத்மகுமரன் நவிந்தன், ரஞ்சித்குமார் அக்ஷயன்

பயிற்றுவிப்பாளர் - குலேந்திரன் ஷெல்டன்

பொறுப்பாசிரியர் - சுப்ரமணியன் உதயனன்

விளையாட்டுக்களுக்கான பொறுப்பாசிரியர் - தேவசகாயம் றெக்னோ கிங்ஸ்லி

சென். ஜோன்ஸினை பொறுத்தவரையில் சம காலத்தில் பிரிவு இரண்டின் ஒரு நாள் போட்டித்தொடரில் அரையிறுதி வரை முன்னேறியிருந்தனர், துரதிஷ்ட வசமாக போட்டி மழை காரணமாக இடம்பெறாது போக புள்ளிகளடிப்படையில் சென். ஜோன்ஸ் தொடரிலிருந்து வெளியேறியிருந்தது. கடந்த பருவகாலங்களினை விட இம்முறை சுற்றுத்தொடரில் அணி சிறந்த பெறுதியினை வெளிப்படுத்தியுள்ளது.

சென். ஜோன்ஸ் அணியினை அனுபவம்மிக்க பயிற்றுவிப்பாளர் பத்மநாதன் லவேந்திரா வழிநடத்துகின்றார். இவர் 2011 முதல் பற்றுவிப்பாளராக செயற்பட்டு வருகின்றார். இடைப்பட்ட காலத்தில் (2017-2018) இவர் மாவட்ட பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்தார். வடக்கில் முதல் அணியாக கல்லூரியின் சிரேஷ்ட அணியினை பிரிவு 3இலிருந்து பிரிவு 2 இற்கு தரமுயர்த்திய பெருமைக்குரிய பயிற்றுவிப்பாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சென். ஜோன்ஸ் கல்லூரி அணி –**

நேசகுமார் எபனேசர் ஜெஷில், அண்டர்சன் சச்சின் கணபதி, ஜெயச்சந்திரன் அஷ்னாத், அருள்சீலன் கவிஷன், சங்கீத் கிரேம் ஸ்மித், மகேந்திரன் கிந்துசன், கிருபானந்தன் கஜகர்ணன், ராமன் அனுசாந்த், மேர்பின் ரண்டியோ, உதயனன் அபிஜோய்ஷாந்த், குகதாஸ் மாதுளன், விஜயராஜா சஞ்சய், சௌந்தர்ராஜன் ஆதர்ஷ், ஸ்ரான்லி ஜேசுநேசன் சாம்சன், டினேஷ்க் லறுன், உதயகுமார் ஜோன்ஷிகன், கோபாலகிருஷ்ணன் றோஜிதன், புஷ்பராசா யனுசன், சற்குணராஜா வினுக்ஷன்

பயிற்றுவிப்பாளர் - பத்மநாதன் லவேந்திரா

பொறுப்பாசிரியர் - கோபாலகிருஷ்ணன் கோபிகிருஷ்ணா விளையாட்டுகளிற்கான பொறுப்பாசிரியர் - சி.ஏ. அரவிந்தன்

# ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி







யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு பாடசாலை அதிபர் கந்தசாமி சிவநேசன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கணினிப் பொறியியலாளரும் டெக்கொரின் சொலூசன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அரியகுமார் சிறிகரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை ஸ்ரீஇராமச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கிருஷ்ணபிள்ளை பாக்கியநாதனும், முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் வாரித்தம்பி பிரபாகரனும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சரவணமுத்து சிதம்பரநாதனும் கலந்துகொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், வெற்றிக் கோப்பைகளும் விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. மேற்படி நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் 170 காணி அளிப்பு காணி உத்தரவுப்பத்திரம் வழங்கும் நிகழ்வு

(எம்.எப்.நவாஸ்)




அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிருவாக எல்லைக்குள் அரச காணிகளை வைத்திருக்கும் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, ஆலங்குளம் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொது மக்களுக்கு, நிரந்தர காணி அளிப்புப் பத்திரங்கள் மற்றும் காணி உத்தரவுப்பத்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று பிரதேச செயலாளர் பிரிஎம்.இர்பான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண காணி நிர்வாக திணைக்களத்தின் உதவிக் காணி ஆணையாளர் கேஎல்எம்.முசம்மில், அம்பாறை மாவட்ட தலைமையக காணி உத்தியோகத்தர் றாபி மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கணக்காளர் ஏஎம்.றிபாஸ், நிருவாக உத்தியோகத்தர் கே.பி. சலீம், கிராம நிருவாக உத்தியோகத்தர் ஜவ்பர், காணி உத்தியோகத்தர் இஸ்மாயில் றியாத், காணிப் பிரிவு பிரதம முகாமைத்துவசேவை உத்தியோகத்தர் எஸ்.ஜே.தேவானந் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் காணிப்பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

முன்னாள் பிரதேச செயலாளர் எம்ஏசி. அகமது சாபீர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இக்காணி அளிப்பு பத்திரங்களும் காணி உத்தரவுப்பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டதனை மாவட்ட செயலாளர் அவர்கள் தனது உரையில் நினைவுகூர்ந்தார்.

இந்நிகழ்வில் 59 காணி அளிப்பு பத்திரங்களும், 111 காணி உத்தரவுப்பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# பொதுமக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மகிழ்ச்சி முகாம்

(நூருல் /ஹுதா உமர்)



இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் கீழ் இறக்காமம்-5 ஆம் பிரிவு நியூ குன பிரதேசத்தில் இயங்கும் யஷோதரா மகளிர் சங்கமும்,

உளச்சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனமும் இணைந்து பொதுமக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மகிழ்ச்சி முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

அந்தக் கிராமத்தில் உள்ள முதியவர்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள், விசேட தேவையுடையவர்கள், கணவன் மனைவி மற்றும் பிள்ளைகள் என அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் இம்மகிழ்ச்சி முகாம் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.றஷ்ஷான் (நளீமி) கலந்துகொண்டார்.

உளச் சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனத்தின் தலைவரும் சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பிரகீத், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேகா எதிரிசிங்க, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.கே.சாஜிதா மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இம்மகிழ்ச்சி முகாமில் உளவியல் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள், மகிழ்ச்சிகரமாக

வாழும் கலை, முரண்பாடுகளை இனங்காணலும் முகாமை செய்தலும், இளைஞர்களுக்கான

வழிகாட்டல் நிகழ்வுகள், குழுப் பயிற்சி மற்றும் செயற்பாடுகள், சிறுவர் விளையாட்டுகள், சித்திரம் வரைதல் போட்டிகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் என முழு நேரத்தையும் பங்குபற்றுநர்கள் மகிழ்ச்சிகரமாக வைத்திருக்கும் வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் தீச்சுடர் முகாம் நடைபெற்றது. பங்குபற்றுநர்களின் விசேட கலைத் திறமைகள், ஆற்றல்கள் என்பனவும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கம் தம்பலகாமத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடலானது தம்பலகாமம் பிரதேச சபை மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

இதனை அகம் மனிதாபிமான வளநிலையம் ஏற்பாடு செய்திருந்தது. 45 நாட்களுக்கு ஒரு முறை இக்கலந்துரையாடல் இடம் பெற்றுவருகிறது. இதில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய சிவில் சமூக உறுப்பினர்கள், இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள், உள்ளூர் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிராமங்களில் காணப்படும் சமூக மட்டப் பிரச்சினைகளை உள்ளூர் அதிகார சபைகள் ஊடாக மக்கள் பங்கேற்பின் மூலமான தீர்வுகளைப் பெற்றுக்கொண்டு சமூகத்தை விழிப்படையச் செய்வது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது தம்பலகாமம் பிரதேச சபை மூலமாக ஜயபுர பகுதியில் கொட்டப்படும் கழிவு காரணமாக துர் நாற்றம் வீசுதல், யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு, அப்பகுதியில் கிரவல் அகழ்வு உள்ளிட்ட பிரச்சினைகளை ஊடகவியலாளர் ஒருவர் முன்வைத்து, இவை தொடர்பில் பிரதேச சபை செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தம்பலகாமம் பிரதேச சபை செயலாளர் உடகெதர, அகம் மனிதாபிமான வள நிலையத்தின் திட்ட இணைப்பாளர், கள இணைப்பாளர், சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள், உள்ளூர் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பயனற்றவைகளை பயன்பாட்டிற்கு மாற்றுவோம்! இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில்



(எம்.எம்.றம்ஸீன்)

"பயனற்றவைகளை பயன்பாட்டிற்கு மாற்றுவோம்" எனும் கருத்திட்டத்திற்கமைவாக கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத்தின் வழிகாட்டலுக்கு அமைய பாடசாலை மாணவர் பயன்பாட்டிற்கு உதவாத கதிரைகள் மற்றும் மேசைகளை பயன்பாட்டிற்கு உகந்ததாக மாற்றும் வேலைத்திட்டம் அண்மையில் பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் மூலம் பாவனைக்கு உதவாமல் இருந்த பல கதிரைகள் மற்றும் மேசைகள் மாணவர்களின் மீள் பாவனைக்கு உகந்ததாக மாற்றப்பட்டன.



# பாடசாலை – பல்கலைக்கழக முறைமைகள் எதிர்காலத்தில் மாற்றப்படப்போகின்றன

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தகவல்

நீண்டகால மாற்றமாக, எதிர்காலத்தில் பாடசாலை முறைமையும் பல்கலைக்கழக முறைமையும் மாற்றபபடத் தயாராக உள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல வருடங்களுக்கு முன்பே நமது கல்விமுறை மாறியிருக்க வேண்டும். அது உண்மை. எந்த அரசு வந்தாலும் அதை நினைத்துக்கூட பார்க்கவில்லை. இதற்காகத்தான் கல்விச் சீர்திருத்தங்களைத் தொடங்கினோம்.

அடுத்த ஆண்டுக்குள், புதிய விடயங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. இதனை விரைவாக நடைமுறைப்படுத்த துணைக்குழு நியமிக்கப்பட்டு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வியானது வேலைவாய்ப்புச் சந்தைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். உலகில் உள்ள நாடுகள் தொழிலாளர் சந்தைக்கு ஏற்றவாறு படிப்புகளை வடிவமைத்துள்ளன. ஆனால், நம் நாட்டில் உள்ள கற்கைகள் பழையவை. பாடசாலைக் கட்டமைப்புக்கள் தொழில்சந்தை பற்றி சரியான ஆய்வு செய்யவில்லை.

இந்த அரசாங்கத்தில் முதன்முறையாகத் தொழிற்சந்தை குறித்து சர்வதேச ஆய்வை நடத்தி இலங்கைக்கு ஏற்ற ஆய்வுகளை பிரயோகித்து அறிக்கை தயாரித்தோம்.

அதன் அடிப்படையில், தொழிலாளர் சந்தைக்கு ஏற்ற கல்வியை நாங்கள் தயார் செய்கிறோம். உடனடித் தீர்வாக தொழிற்பயிற்சி நிலையத்தின் படிப்புகள் மாற்றப்படுகின்றன.

நீண்டகால மாற்றமாக, எதிர்காலத்தில் பாடசாலை முறைமையும் பல்கலைக்கழக முறைமையும் மாற்றப்படத் தயாராக உள்ளன என குறிப்பிட்டுள்ளார்.



# தொல்பொருள்களைப் பாதுகாக்க புதிய சட்டமூலம் உருவாகிறது!



நாட்டின் தொல்பொருள்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்களை பாதுகாப்பதற்கு புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளோம்.

இந்த நாட்டின் தொல்பொருள்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்கள் கண்டறியப்பட வேண்டும்.

புதிய சட்டம் ஒன்றை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதில் சேர்க்கப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் அடிப்படை விதிகளைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






## கலாசாலையில் சிறப்பு மகளிர் தினச் நிகழ்வு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த மகளிர் தினச் சிறப்பு நிகழ்வுகள் நேற்று புதன் காலை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவியும் யாழ்ப்பாணக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமாகிய நளினி அகிலதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வுகளை கணித நெறி ஆசிரிய மாணவர் செல்வரட்ணம் சந்திரகுமார் நெறிப்படுத்தினார். ஆசிரிய மாணவர் உரையினை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி தினேஸ் கௌசியாவும் விரிவுரையாளர் உரையினை முத்துக்குமாரு ஜெயக்குமாரியும் ஆற்றினர். பிரதம விருந்தினருக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை மேற்கொண்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பெண் கல்விக்கு வழங்கிய பங்களிப்புப் பற்றி கலாசாலை அதிபர் ச.லலீசன் எடுத்துக்கூறி நிறைவுரையாற்றினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி நளினி அகிலதாஸ் கலாசாலைச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் மதிப்பளிக்கப்பட்டார். திருமதி நளினி அகிலதாஸ் இன்று வியாழக்கிழமை அரசபணியில் இருந்து இளைப்பாறுகை பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலாவதி மென்பானங்கள் வர்த்தகர்களுக்கு தண்டம்!

சாவகச்சேரி நகர் மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தி வைத்திருந்த வர்த்தகர்களுக்கு 28,000 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட சாவகச்சேரி நகரம் மற்றும் மீசாலை ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரம் பொது சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் , உணவகம் மற்றும் வர்த்தக நிலையம் ஆகியவற்றில் விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த காலாவதியான சோடா மற்றும் நெக்டர் பானங்கள் என்பன மீட்கப்பட்டன.

அதனை அடுத்து குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் குறித்த வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதன் போது மன்றில் முன்னிலையான வர்த்தகர்கள் விசாரணையின்போது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து , அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று , நெக்டர் பானத்தை வைத்திருந்த உணவகத்திற்கு 20000 ஆயிரம் ரூபாவையும், சோடா வைத்திருந்த வர்த்தக நிலையத்திற்கு 8000 ரூபாவையும் தண்டமாக விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்துவிடவும் கட்டளையிட்டது. (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2024 இல் வெளியிடப்பெற்றது.